## பத்திரிக்கை செய்தி

## வரி நிர்ணயம் செய்ய லஞ்சம் கேட்டு பெற்ற பொறிவைப்பு நடவடிக்கை வழக்கில் முன்னாள் வருவாய் உதவியாளர் அவர்களுக்கு தண்டனை வழங்கி தீர்ப்பு

புகார்தாரர் திருமதி.மும்தாஜ் பாட்சா, என்பவர் கந்தல் கிராமம், நீலகிரி மாவட்டத்தில் வசித்து வந்தார். தான் புதிதாக கட்டிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்யப்பட்டு வரி செலுத்தியுள்ளார். மீண்டும் திரு.பாக்கியராஜ், முன்னாள் வருவாய் உதவியாளர், உதகமண்டலம் முனிசிபல் அலுவலகம், உதகமண்டலம் அவர்கள் புகார்தாரரிடம் உங்களுடைய இல்லத்திற்கு மீண்டும் வரி நிர்ணயம் செய்ய வேண்டும் என கூறியுள்ளார். வரி நிர்ணயத்தை தங்களுக்கு சாதகமாக செய்து தர தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நீலகிரி பிரிவில் வழக்குபதிவு செய்யப்பட்டது. 09.02.2009 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதில் எதிரி, புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.3,000/-த்தை கேட்டு பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீலகிரி சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு இன்று 14.03.2023 எதிரி திரு.பாக்கியராஜ்க்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 3 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.1,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 4 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.1,000/- அபராதமும் விதித்து தண்டணையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

# PRESS NOTE

## Formerly Revenue Assistant convicted in bribe case

The complainant Tmt.Mumtaz Basha, is residing at Kandal Village, Nilgiris District. She constructed a new house and paid the house tax in the year 2009. Later Tr.Backiaraj, Revenue Assistant visited the complainant house and informed the complainant that the house tax has to be re-fixed and demanded Rs.3,000/- as bribe for favouring her in the refixation. The complainant not willing to give bribe, preferred complaint with Vigilance and Anti– Corruption, Nilgiris Detachment. In this connection a trap was organized. On 09.02.2009 trap was laid against the accused and the accused was caught red-handed while demand and acceptance of bribe money Rs.3,000/- from the complainant. On completion of investigation, the case was charge sheeted against the accused. The case was tried before the Spl. Court for PC Act, Cases, Nilgirs. Today 14.03.2023 the Special Court pronounced the judgement against Tr.Backiaraj, formerly Revenue Assistant convicted for 3 years Rigorous Imprisonment and with fine Rs.1,000/- u/s 7 and concurrently 4 years Rigorous Imprisonment and with fine Rs.1,000/- u/s.13(2) & 13(1)(d) of the Act. Both the sentences ordered to run concurrently.